| Scale | E | Tempo | 130 | Style | Swing> Charstom |
|---|---|---|---|---|---|

41. ஆவியினாலே ஆகும் ஸ்தோத்திரம்

பலத்தினாலும் அல்ல பராக்கிரமும் அல்ல
என் ஆவியினால் ஆகும் என்றீர்
உமக்கு ஸ்தோத்திரம்

1

வல்லமையை தந்திடும் ஆவியே ஸ்தோத்திரம்
சத்தியத்தில் நடத்திடும் ஆவியே ஸ்தோத்திரம்
பாவமற கழுவிடும் பரிசுத்தமாக்கிவிடும்
நீதிமான்கள் ஆக்கிடும் ஆவியே ஸ்தோத்திரம்

2

எனக்காக வேண்டிடும் ஆவியே ஸ்தோத்திரம்
தேவ அன்பை ஊற்றிடும் ஆவியே ஸ்தோத்திரம்
விடுதலை ஆக்கிடும் போதித்து நடத்திடும்
பலவீனத்தில் உதவிடும் ஆவியே ஸ்தோத்திரம்

3

தாவீதின் மேல் இறங்கின ஆவியே ஸ்தோத்திரம்
கிதியோன் மேல் இறங்கின ஆவியே ஸ்தோத்திரம்
கிருபையின் ஆவியே, விண்ணப்பத்தின் ஆவியே
அற்புதங்கள் செய்திடும் ஆவியே ஸ்தோத்திரம்

4

பாவத்தைக் கண்டித்துணர்த்தும் ஆவியே ஸ்தோத்திரம்
சத்தியத்தை நினைப்பூட்டும் ஆவியே ஸ்தோத்திரம்
பெலனடையச் செய்திடும் சாட்சியாக நிருத்திடும்
சரீரங்கள் உயிர்ப்பிக்கும் ஆவியே ஸ்தோத்திரம்